1974 மார்ச் 12]

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாசன வசதிகள்.

*384—வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டுக்குப் பின்னால் திருச்சி மாவட்டத்தில் பாசன வசதிகளைப் பெருக்கிட அரசு மேற்கொண்டுவரும் முக்கிய நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கியதாகவும், வறட்சிப் பகுதியாகவும் இருக்கக்கூடிய அரவக்குறிச்சியிலே பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு நொய்யலாறு திட்டத்தை எப்பொழுது அரசு மேற்கொள்ளும்? அதற்கு விரிவான திட்டம் எப்பொழுது போடப்படும் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருச்சி மாவட்டம் முழுவதிலும் என்ன என்ன திட்டங்கள் என்ற விவரம் இங்கு அவையில் வைக்கப் பட்டிருக்கிறது. தொகுதிவாரியாகக் கேட்டால் விவரம் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிட்டதைப் பற்றி, மானியம் வரும்போது விவாதிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, காவிரியில் வெள்ளம் வருகின்ற நேரத்தில், நிறையத் தண்ணீர் கடலிலே சென்று வீணாகக் கலக்கிறது. அந்தச் சமயத்தில் வடிகால் வாய்க்கால் திட்டம் அமைத்து வீணாகும் தண்ணீரைப் புஞ்சைப் பகுதியில் உள்ள ஏரிகளில் நிரப்பினால் இப்பொழுதுள்ளதை விட இன்னும் அதிகமாகப் பாசன வசதியைப் பெருக்க முடியுமே, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காவிரியில் புதிய பாசன வசதித் திட்டத்தை மேற்கொள்ள முடியாது என்று அங்கத்தினருக்கே தெரியும். காரணம், நீரைப் பற்றிய தகராறு இருக்கிறது. இன்றைக்கு அங்கு வருகின்ற வெள்ளத்தைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர் எழுப்ப ரூ. 2 கோடிக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக இந்த ஆண்டு வேலை தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயறு வகைகள் சாகுபடி

*385 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

@230-235—ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, பயிர் வகைகளை உற்பத்தி செய்வதில் வரவரக் கொஞ்சம் குறைவு ஏற்படுகிறது. காவேரி நீரை நாம் பிப்ரவரி மாதத்திலே அடைத்துவிடுகிறோம். தஞ்சை, திருச்சி போன்ற பகுதிகள் ஏறத்தாழ 4 மாதங்கள் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் புதிய திட்டம் தீட்டி, இந்தப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, தஞ்சை, திருச்சி போன்ற பகுதி களில் தீவிர திட்டங்கள் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, இந்த அசசிட்ட அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இது ஊட்டப் பயிராகவும், கலவைப் பயிராகவும் அல்ல. அறுவடை ஆனபிறகு, ஜூன், ஜூலையிலே 3-வது பயிராகத்தான் நாம் ஊக்குவித்துக்கொண்டு வருகிறோம்.

திருச்சிராப்பள்ளியில் கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டம்.

*386 வினு—திரு. பெ. சௌந்தர பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே தற்போது துவங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) & (இ) விவர அறிக்கை † ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கோழிப் பண்ணைக்கென்று ஒரு தனி கார்ப்பரேஷன் நிறுவப்பட்டுள்ளதா? ஆமென்றால், நிறுவியதன் நோக்கம் என்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: கோழிப் பண்ணைக்கு என்று ஒரு கழகம், ஒரு கார்ப்பரேஷன் நிறுவப்பட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படை நோக்கம் என்னவென்றால், அந்தக் கார்ப்பரேஷனை நாம் அமைத்திருப்பதால், பாங்கிலிருந்தும் பினன்ஸ் இன்ஸ்டிட்டியூஷன் களிடம் இருந்தும் கடன் வாங்க முடியும். அரசு, பாங்கிலிருந்து கடன் வாங்க முடியாது. அதன் மூலமாக, இதை அதிகமாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பது மட்டுமல்லாமல், கார்ப்பரேஷன் என்று சொல்லும் போது அது லாபத்தில் இயங்கவேண்டுமென்ற அந்த முறையையும் கடைப்பிடிக்கவேண்டும்.

@ 236–237-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

† 238–241-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.